பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
24 09 2025 WEDNESDAY 12 40 PM
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) நவராத்திரி பண்டிகையின் மூன்றாம் நாளான இன்று மாதா சந்திரகாந்தாவின் அருளாசி மக்களுக்கு முன்னேற்றத்தை வழங்கட்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) உலகின் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3) எரிசக்தி மற்றும் மின்உற்பத்திக்கு வேளாண்மையை பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.

4) திருநெல்வேலி – சென்னை வந்தேபாரத் ரயிலில் இன்று முதல் கூடுதலாக நான்கு பெட்டிகள் இணைக்கப்பட்டுள்ளன.

5) சீன சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஸா போஸ்லே – அங்கிதா ரெய்னா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

நவராத்திரி பண்டிகையின் 3ஆம் நாளான இன்று மாதா சந்திரகாந்தாவின் அருளை வேண்டுவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அமைதி, தைரியம், அச்சமின்மை ஆகியவற்றின் சின்னமாக திகழும் மாதா சந்திரகாந்தாவின் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

அனைவரின் வாழ்விலும் முன்னேற்றத்தையும், செல்வத்தையும் மாதா சந்திரகாந்தா வாரிவழங்கட்டும் என்றும் பிரதமர் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

அமெரிக்காவின் நியூயார்க் சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், உலகின் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் உயர்மட்டக் கூட்டத்தை தலைமையேற்று நடத்தினார்.

இதில் பேசிய அவர், உலகின் தெற்கத்திய நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு, அமைதி, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

இதற்கென தெற்கத்திய நாடுகளுக்கு இடையிலான ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே, திரு. ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஐ.நா பொதுச்சபை கூட்டத்திற்கு இடையே, சிங்கப்பூர் வெளியுறவு அமைச்சர் திரு. விவியன் பாலகிருஷ்ணன், சோமாலிய அமைச்சர் திரு. Abdisalam Ali உள்ளிட்ட தலைவர்களுடன் இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து தாம் விவாதித்ததாக தெரிவித்துள்ளார்.

மொரீசியஸ், மாலத்தீவு மற்றும் இலங்கையின் அமைச்சர்களையும் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளதாக தமது சமூகவலைதளப் பதிவில் திரு. ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

தூய்மை எரிசக்திக்கான கட்டமைப்பை அடுத்த ஐந்தாண்டுகளில் அதிக அளவில் விரிவுபடுத்துவதற்கான திட்டங்களை இந்தியா மேற்கொண்டுள்ளதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

நியூயார்க்கில், இந்திய - அமெரிக்க ஒத்துழைப்புக்கான கூட்டத்தில் உரையாற்றிய அவர், தூய்மை எரிசக்தி திறனை, 250 ஜிகாவாட்டிலிருந்து 550 ஜிகாவாட்டாக உயர்த்த வேண்டும் என்ற இலக்கோடு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக கூறினார்.

இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பு இலக்குகளில், அமெரிக்காவின் பங்கும் கணிசமாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

வரும் ஆண்டுகளில் அமெரிக்காவுடன் எரிசக்தி பொருட்களின் வர்த்தகத்தை அதிகரிப்பதற்கான முயற்சிகளை இந்தியா மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இருநாடுகளும் இணைந்து, அணுசக்தி திட்டங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>>>>><<<<<

எரிசக்தி மற்றும் மின்உற்பத்திக்கு வேளாண்மையை பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு. நிதின் கட்கரி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று உயிரி எரிசக்தி தொழில்நுட்ப கண்காட்சியை தொடங்கி வைத்துப் பேசிய அவர், நாட்டின் 65 சதவீத மக்கள் கிராமப்புறங்களில் விவசாயத்தை நம்பியிருப்பதாக தெரிவித்தார்.

நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் 14 சதவீதம் அவர்களின் பங்களிப்பாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

வேளாண் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்காததால், கிராமப்புற விவசாயிகள் ஏழ்மை நிலைக்கு தள்ளப்படுவதாகவும், வேலைவாய்ப்பு குறைந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்க்கரை, மக்காச்சோளம், சமையல் எண்ணெய், சோயாபீன்ஸ் போன்ற இந்திய வேளாண் பொருட்களுக்கான விலை, உலக சந்தையின் அடிப்படையில் அமைவதாக கூறினார். ஆனால், இந்திய விவசாயிகள் இதனால் பாதிக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

உயிரி எரிசக்தி துறையை ஊக்குவிப்பதன் மூலம், கிராமப்புற மற்றும் பழங்குடியின விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயரும் என்றும் திரு. நிதின் கட்கரி கூறினார்.

>>>>><<<<<

பிரதமரின் கிராமப்புற வீட்டு வசதி திட்டத்தின்கீழ், இதுவரை 2 கோடியே, 82 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மேலும், 2 கோடிக்கும் மேற்பட்ட வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடப்பணிகள் நடைபெற்று வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் பாதுகாப்பான கான்கிரிட் வீடுகளின் தேவை அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு, கூடுதலாக வீடுகளை ஒதுக்கீடு செய்யவும் மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் கிராமப்புற வீட்டு வசதி திட்டம், ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தையும், சமூக பொருளாதார மேம்பாட்டிற்கும் வழிவகுத்துள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

*நாட்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் புத்தாக்க தொழில்களுக்கான சுற்றுச்சூழலை வலுப்படுத்த சென்னை ஐஐடி - ஐடியா பாஸ் நிறுவனம் இணைந்து இணையதளம் ஒன்றை உருவாக்கியுள்ளன.*

*இதன் பயனாக, நகர்ப்புற மற்றும் கிராமப்புற புத்தாக்கத் தொழில்களுக்கு இடையிலான தொடர்புகள் விரிவுபடுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*தொழில் ரீதியாக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இந்த தளத்தின் மூலம், சிறப்பான ஆலோசனைகளை வழங்குவார்கள் என்றும் சென்னை ஐஐடி-யின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>>>>><<<<<*

*மத்திய அரசின் சரக்கு மற்றும் சேவை சீர்திருத்த நடவடிக்கைக்கு பொதுமக்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது.*

*மருத்துவ மற்றும் ஆயுள் காப்பீடுகளுக்கான சரக்கு மற்றும் சேவை வரி, பூஜ்யம் சதவீதமாக அறிவிக்கப்பட்டுள்ளது மக்களிடையே வரவேற்பை பெற்றுள்ளதாக தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த காப்பீட்டு முகவர்கள் தெரிவித்தனர்.*

*(சவுண்ட் பைட் – ஏஜெண்ட்டுகள் 38 செகண்ட்ஸ்)*

*>>>>><<<<<*

*சவுதி அரேபியாவின் மத தலைவர் Sheik Abdula Bin Mohammed Al AlSheikh மறைவுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.*

*இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், அன்னாரது இழப்பு, அந்நாட்டிற்கும் இஸ்லாமிய மக்களுக்கும் பேரிழப்பாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*>>>>><<<<<*

*திருநெல்வேலி- சென்னை இடையேயான வந்தேபாரத் எக்ஸ்பிரஸ் ரயிலில் இன்று முதல் கூடுதலாக 4 பெட்டிகள் இணைக்கப்பட்டு, 20 பெட்டிகளுடன் இயக்கப்படுகிறது.*

*இதன்மூலம் 320 இருக்கைகள் கூடுதலாக பயன்பாட்டிற்கு வந்துள்ளதாக தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.*

*நீளம் மற்றும் வெள்ளைநிற பெட்டிகளுடன் இயங்கி வந்த இந்த வந்தேபாரத் ரயில், புதிதாக ஆரஞ்சு நிற பெட்டிகளுடன் புதிய ரயிலாகவே மாற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.*

*>>>>><<<<<*

*மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பஞ்சாப் மாநிலத்தில் நிலைமை சீரடைந்து வருகிறது.*

*219 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு, 8 ஆயிரத்து 200-க்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.*

*வெள்ளம் முற்றிலுமாக வடிந்ததும் அவர்களை மீண்டும் வீடுகளுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.*

*இந்த மழை வெள்ளத்தால் இரண்டாயிரத்து 500க்கும் மேற்பட்ட கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.*

*4 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்துள்ளனர்.*

*2 லட்சம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த பயிர்கள் வெள்ளத்தால் சேதமடைந்துள்ளதாகவும், பெருமளவிலான கால்நடைகள் உயிரிழந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.*

*>>>>><<<<<*

*சீனாவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருத்துஸா போஸ்லே – அங்கிதா ரெய்னா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-1 6-3 என்ற செட்கணக்கில் தென்கொரியாவின் Nari Kim – சீனாவின் Chengyiyi Yuan இணையை வென்றது.*

*இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் Riya Bhatiya காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>><<<<<*

*ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியின் சூப்பர்-4 சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது*

*இப்போட்டி, துபாயில் இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.*

*>>>>><<<<<*

*தைவான் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Devika Sihag காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 26-28, 21-17, 21-13 என்ற செட்கணக்கில் சிங்கப்பூரின் Xin Yie Lee-யை வென்றார்.*

*இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் நிதின் குமார் – Ritika Thaker இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் Dayanand Shimoga இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>>END<<<<<*